05.08.2024

O.S.No.183/2019

வா.சா.1.திருமதி.ஆறுமுக லட்சுமி  க.பெ.ஆறுமுகம்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க மட்டும் தெரியும். நான் ஆரம்பத்தில் தினமணி நகரிலும், தற்போது பரவையிலும் குடியிருநது வருகிறேன். தாவா சொத்து தினமணி நகர் அருகில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள இடம் எனது வீட்டில் இருந்து சுமார் 2 கிலோமீட்டர் இருக்குமா என்றால் தெரியாது. தாவா சொத்து எங்குள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து சிறுதுாரில் உள்ளது. தாவா சொத்தினை நான் லட்சுமி அம்மாள் கணவர் முத்துராமலிங்கம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன்.  மேற்படி முத்துராமலிங்கம் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் அசல் ஆவணத்தினை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். அந்த கிரைய அசல் ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவாசொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து கம்பிவேலி அமைக்கப்பட்டு உள்ளது என்றால் பிளாட்டாகதான் இருந்தது, தற்போது தான் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. பிரதிவாதிதான் கம்பிவேலி போட்டுள்ளார் என்றால் யார் போட்டார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிதான் கம்பிவேலி போட்டார் என்றாலும் அதைதெரிந்துகொண்டே மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. கம்பிவேலியில் 4 திசையில் கேட் உள்ளது என்றால் சரியல்ல, 1 கேட்தான் உள்ளது. தாவா சொத்தினை நான் பார்த்து சுமார்  6 மாதங்கள் இருக்கும். அவ்வாறு நான் சொத்தை பார்வையிட்ட போது கம்பிவேலி அமைக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நாங்கள் கம்பி வேலி அமைக்கவில்லை என்றால் சரிதான், கல் ஊன்றி வைத்திருந்தோம். தாவா சொத்து கோபாலகிருஷ்ணகோன் பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. தாவாசொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று எனது நிருபண வாக்குமூலத்திலும் வழககுரையிலும் சொல்லிவிட்டு அதைமறுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம்

காட்டப்படும் புகைப்படத்தில் கண்டுள்ள சொத்துதான் தாவா சொத்து என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும்புகைப்படத்தில் உள்ளதுதான் தாவா சொத்து என்றால் சரிதான், **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ-1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. நான் கிரையம் பெற்றதாக கூறப்படும் தாவாசொத்தும் இந்த வழக்கேகாடு இணைந்து காட்டப்படும் மற்ற வழக்கோடு காட்டப்படும் சொத்துக்களும் ஒன்றோடொன்று இணைந்து ஒரே சமுக்கமாக காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன அனைத்து சொத்துக்களும் தாவா சொத்தோடு சேர்ந்து ஒரே சமுக்கமாக முள்கம்பிவேலிக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண கோன் பள்ளியை நான் பார்த்துளளேன். அந்த பள்ளி சுமார் 50 ஆண்டுக்கு மேல் பழமையான பள்ளி என்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானம் தான் முள்கம்பிவேலிக்குள் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எங்கள் பிளாட்டுதான் முள்கம்பிவேலிக்குள் அமைந்துள்ளது.

4. முள்கம்பிவேலிக்குள் விளையாட்டு மைதானம்தான் உள்ளது என்றாலும், அதை கோபாலகிருஷ்ண கோன் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல, விளையாட்டு மைதானம் தனியாக உள்ளது. தாவா எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளோம். தாவா இடத்தினை மோசடியாக உரிமை கோரி நாங்கள்தான் கட்சி செய்து வருகிறோம் என்றாலும், நான் கூறுவது போல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் கம்பிவேலி 2019ம் ஆண்டுக்கு பின்னிட்டு தான் போடப்பட்டுள்ளது.

5. தாவா சொத்தினை அளந்து அத்துமால் பார்த்து வாங்கினோமா என்றால் எனக்கு தெரியாது, எனது கணவர்தான் கிரையம் பெற்று கொடுத்தார். தாவா சொத்தினை நான் கூறுவது போல் அளந்து அத்துமால் பார்த்து கிரையம் வாங்கவில்லை என்றாலும், ஆரம்பத்தில் இருந்து தாவாசொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கோபாலகிருஷ்ணகோன் பள்ளி விளையாட்டு மைதானமாகவும், விடுதியாகவும் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். பிரதிவாதிகளுக்கு நிறைய நிலங்கள், கல்லூரி, பள்ளி உண்டு என்றால் எனக்கு தெரியாது.

அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம், அவர் பெற்றதாக சொல்லப்படும் பொது அதிகார ஆவணத்தில் அசலை நான் வாங்கி பார்த்தில்லை என்றால் சரிதான். அய்யனார், இளம்ஜி சௌந்திராஜன் எனப்வரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் கேரளாவில் உள்ள பாரசாலையில் பதிவு பெற்ற ஆவணம் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. எனது வழககுரையில் அய்யனார் கிரையம் பெற்ற ஆவணம் கேரளாவில் உள்ள பாறசாலையில் பதிவு பெற்ற ஆவணம் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. இளம்ஜி சௌந்திராஜன் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவற்றினை பொறுத்து எந்த காலத்திலும் அய்யனாருக்கோ, வேறு நபர்களுக்கோ கிரையமோ, பொது அதிகார ஆவணமோ எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் என்பவர் இளம்ஜி சௌந்திராஜன் என்பவரிடம் இருந்து கிரையமும், பொது அதிகார ஆவணமும் பெற்றார் என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாகத்தான் உள்ளது. நானோ, எனது கிரையம் கொடுத்தாக சொல்லப்படும் முத்துராமலிங்கமோ தாவாசொத்தினை பட்டா வாங்கவில்லை என்றால் சரிதான். எனது கிரைய பத்திரமும், எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் முத்துராமலிங்கம் என்பவரது கிரைய பத்திரமும் பெயரளவில் நடைமுறைக்கு வராமல் ஆவண வடிவிலேயே உள்ளது என்றாலும், மேற்படி கிரைய ஆவண அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜனுக்கு கேரளாவில் உள்ள பாரசாலையில் ஒரு செண்டுநிலம் இருந்ததாக எனது பிராதில் சொல்லி உள்ள சங்கதியை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு ஒரு செண்டு நிலம் இளம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு கேரளாவில் உள்ள பாரசாலையில் இருந்ததற்கான ஆவணம் நான் பார்த்தில்லை என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திராஜன், அய்யனாருக்கு எழுதிகொடுத்தாக சொல்லப்படும் 12.03.1997ம் தேதிய கிரைய பத்திரமோ, 20.04.1996ம் தேதிய பொது அதிகார ஆவணமோ, எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அதில் உள்ள கையொப்பம் இளம்ஜி சௌந்திராஜன் உடையது அல்ல என்று பிரதிவாதிகள் மறுத்துள்ள

நிலையிலும் மேற்படி இரண்டு ஆவணங்களையும் நிருபிக்கும் விதமாக நான் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 12.03.1997ம் தேதிய கிரைய பத்திரம் 20.04.1996ம் தேதிய பொது அதிகார ஆவணத்தினையும் நிருபிக்காத பட்சத்தில் தாவா சொத்தில் 27.11.2006 கிரைய ஆவணப்படி நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-23 லே அவுட், எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து தாக்கலாகவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-23 ஆவணம் தனியாக தாக்கல் செய்யப்ட்டதால் இந்த வழககிற்காக மேற்படி ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் வா.சா.ஆ-23 ஆவணத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், நீதிமன்றத்தில் உரிய முன் அனுமதி பெறாமல் நான் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரையம் சட்டப்படிசெல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு தெரிய சமதளமாகதான் உள்ளது, மேடுபள்ளமாக இல்லை.

9. தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு 17.03.1988ல் பள்ளி கல்வி துறையிடம் அனுமதி பெற்றதாக எனது வழக்குரையில் சொல்லி உள்ள சங்கதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னை இடையுறு செய்ததாக சொல்லி உள்ள சங்கதி இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தினை அளந்தார் என்றால் எனக்கு தெரியாது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தினை அளந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்த அறிக்கையில் தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் 169/2 ஆகியவை பள்ளி விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும் இருந்து வருவதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அய்யனார் தற்போது உயிருடன் இல்லை.

10. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் மேற்படி அறக்கட்டளையை இந்த வழக்கில் சேர்க்காததாலும், அதேபோல் பள்ளி கல்விதுறையை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டில் வங்கி மூலமாக ரூபாய்.50000 வைப்பீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தொடர்பான அசல் வழகககு எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் பிராதில் சொல்லி உள்ளதால் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல.

11. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அய்யனார் எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அய்யனாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த வழககு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழககு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

12. தாவாசொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு சுமார் செண்டு 1-க்கு சுமார் 5 லட்சம் வரை உள்ளது என்ற விவரத்தினை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் முறையாக மதிப்பிடு செய்து நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக இந்த வழககு

தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகீறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.